1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை : திருமதி.S.பொன் மெலிசா B.A., LL.B,**
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.3/2023 அதன் அ.வ.எண்.284/2023**

ஹாருன் நாதர்ஷா பாபு ... மனுதாரர் / வாதி

–எதிர்–

1) ஆனந்தவள்ளி
2) சுந்தர்ராணி
3) அலெக்ஸ் பாண்டியன்
4) மாயா
5) கிளை மேலாளர், கனரா வங்கி
பாளையங்கோட்டை கிளை ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 12.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1,3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B,குருசங்கர் அவர்கள் ஆஜராகியிருந்த போதிலும், போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரருக்கு, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டிய ரூ.84,500/–ஐ இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும்படிக்கும், தவறம்பட்சத்தில் மனு தபசில் நகைகளை ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 38, விதி 5 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

3ம் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களின் தந்தையுமான சுந்தரம் என்பவர், 5ம் எதிர்மனுதாரர் வங்கியில் ரூ.70,000/-க்கு நகைக்கடன் வைத்துள்ளார். மேற்படி சுந்தரம் 08.07.2021ல் இறந்துவிட்டார். மேற்படி நகையை மீட்பதற்கு ரூ.84,500/- தேவைப்படுவதாக 3ம் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் தெரிவித்துள்ளார். அதனால் நகைவியாபாரியான அன்சார் அலியிடம் ரூ.84,500/- பெற்று மேற்படி நகையை மீட்டு, அதன்பின் நகையை விற்று வரும் பணத்தில் ரூ.84,500/-ஐ அன்சார் அலியிடம் கொடுக்க ஏற்பாது செய்து தருவதாக மனுதாரர் கூறியுள்ளார். அதன்பின்பு மேற்படி அன்சர்அலியிடம் ரூ.84,500/-ஐ 16.06.2023ம் தேதியில் மனுதாரர் பெற்று, மனுதாரர் மூலமாக, 5ம் எதிர்மனுதாரர் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது. அதன்பின்பு 5ம் எதிர்மனுதாரர் வங்கிக்கு சென்று 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கொடுத்த அசல் ஆவணங்களை வைத்து நகையை மீட்க முயற்சித்த போது, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் சரியான ஒத்துழைப்பு தரவில்லை. மனுதாரர், 06.07.2023ம் தேதியில் அன்சார் அலியிடம் ரூ.84,500/-ஐ திரும்ப செலுத்திவிட்டார். 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டபடி மனுதாரரிடம் மேற்படி நகைகளை கொடுக்காமல், 5ம் எதிர்மனுதாரரிடமிருந்து வாங்கிக் கொள்ள முயற்சி செய்து வருகிறார்கள். எனவே, மனுதாரருக்கு, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டிய ரூ.84,500/-ஐ இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும்படிக்கும், தவறம்பட்சத்தில் மனு தபசில் நகைகளை ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல.

இறந்துபோன சுந்தரம் பிரதிவாதியின் வங்கியில் ரூ.70,000/-க்கு நகைக்கடன் வாங்கியிருந்த நிலையில் இறந்துவிட்டதை அடுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் வங்கிக்கு நேரடியாக வந்து தெரிவித்து 16.06.2023ல் நகை கடனுக்குரிய தொகை முழுவதையம் செலுத்திவிட்டு வாரிசு சான்று பெற்று நகையை திரும்ப பெற்றுக் கொள்வதாக கூறிச் சென்றுள்ளனர். அதன்பின்பு மனுதாரர், 5ம் எதிர்மனுதாரருக்கு 29.06.2023ல் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் நகையை கொடுக்கக்கூடாது என கடிதம் எழுதியுள்ளார். அதற்கு இறந்துபோன சுந்தரத்தின் சட்டப்படியான வாரிசு சான்று தரும்பட்சத்தில், எவ்விதமாக நீதிமன்ற உத்தரவு தடையும் இல்லாதபட்சத்தில் வங்கி சட்டவிதிப்படி 1 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் நகை ஒப்படைக்கப்படும் என பதில் அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர், 5ம் எதிர்மனுதாரரரை பொறுத்த எந்தவித பரிகாரமும் அசல் வழக்கில் கோரவில்லை. எனவே, இம்மனு 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டிய ரூ.84,500/-ஐ இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும்படிக்கும், தவறும்பட்சத்தில் மனு தபசில் நகைகளை ஜப்தி செய்ய உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியமோ அல்லது சான்றாவணமோ குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

7) மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்பதும், எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். அசல் வழக்கானது வாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய ரூ.84,500/-ஐ பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை 12% பின்வட்டியும் வசூல் செய்ய தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களின் தந்தையுமான சுந்தரம் என்பவர், 5ம் எதிர்மனுதாரர் வங்கியில் ரூ.70,000/-க்கு நகைக்கடன் வாங்கிவிட்டு 08.07.2021ல் இறந்துவிட்டதாகவும், மேற்படி நகையை மீட்பதற்கு ரூ.84,500/- தேவைப்படுவதாக 3ம் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் தெரிவித்தாகவும், அதனால் நகைவியாபாரியான அன்சார் அலியிடம் ரூ.84,500/-ஐ 16.06.2023ம் தேதியில் மனுதாரர் பெற்று, மனுதாரர் மூலமாக, 5ம் எதிர்மனுதாரர் வங்கியில் செலுத்தப்பட்டதாகவும், அதன்பின்பு 5ம் எதிர்மனுதாரர் வங்கிக்கு சென்று 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கொடுத்த அசல் ஆவணங்களை வைத்து நகையை மீட்க முயற்சித்த போது, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் சரியான ஒத்துழைப்பு தரவில்லை என்றும், மனுதாரர், 06.07.2023ம் தேதியில் அன்சார் அலியிடம் ரூ.84,500/-ஐ திரும்ப செலுத்திவிட்டதாகவும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டபடி மனுதாரரிடம் மேற்படி நகைகளை கொடுக்காமல், 5ம் எதிர்மனுதாரரிடமிருந்து வாங்கிக் கொள்ள முயற்சி செய்து வருவதால், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ரூ.84,500/-ஐ இந்நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும்படிக்கும், தவறும்பட்சத்தில் மனு தபசில் நகைகளை ஜப்தி செய்ய உத்தரவிட வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது.

9) 5ம் எதிர்மனுதாரர் தரப்பில், இறந்துபோன சுந்தரம் பிரதிவாதியின் வங்கியில் ரூ.70,000/—க்கு நகைக்கடன் வாங்கியிருந்த நிலையில் இறந்துவிட்டதை அடுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் வங்கிக்கு நேரடியாக வந்து தெரிவித்து 16.06.2023 ல் நகை கடனுக்குரிய தொகை முழுவதையும் செலுத்திவிட்டு வாரிசு சான்று பெற்று நகையை திரும்ப பெற்றுக் கொள்வதாக கூறிச் சென்றதாகவும், அதன்பின்பு மனுதாரர், 5ம் எதிர்மனுதாரருக்கு 29.06.2023 ல் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் நகையை கொடுக்கக்கூடாது என கடிதம் எழுதியுள்ளதாகவும், அதற்கு இறந்துபோன சுந்தரத்தின் சட்டப்படியான வாரிசு சான்று தரும்பட்சத்தில், எவ்விதமாக நீதிமன்ற உத்தரவு தடையும் இல்லாதபட்சத்தில் வங்கி சட்டவிதிப்படி 1 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் நகை ஒப்படைக்கப்படும் என பதில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மனுதாரர், 5ம் எதிர்மனுதாரரரை பொறுத்த எந்தவித பரிகாரமும் அசல் வழக்கில் கோரவில்லை என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

10) மனுதாரர் தரப்பில், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரர் மூலமாக ரூ.84,500/— பெற்று 5ம் எதிர்மனுதாரர் வசம் நகைகடனுக்காக செலுத்திவிட்டு, மேற்படி பணத்தை திருப்பி தராமல், நகைகளை மீட்க முயற்சி செய்து வருவதாகவும், எனவே, 1 முதல் 4 எதிர்மனுதாரர்களை ரூ.84,500/—ஐ இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும்படிக்கும், தவறும்பட்சத்தில் மனு தபசில் நகைகளை ஜப்தி செய்ய உத்தரவிட வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது. மேலும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 16.06.2023 ல் நகை கடனுக்குரிய தொகை முழுவதையும் செலுத்திவிட்டு வாரிசு சான்று பெற்று நகையை திரும்ப பெற்றுக் கொள்வதாக கூறிச் சென்றதாக கூறப்பட்டுள்ளது. அதன்பிறகு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் நகைகளை திரும்ப பெற்றுக் கொள்ள முயற்சி செய்ததாக எந்தவித சங்கதிகளும் தெரிவிக்கவில்லை. மேலும் இம்மனுவானது 19.07.2023ம் தேதியில் தாக்கல்

செய்யப்பட்டு சுமார் 2 ஆண்டு காலமாக நிலுவையில் உள்ளது. மனுதாரர் தரப்பில், தற்போது வரை தபசில் நகைகள் 5ம் எதிர்மனுதாரர் வங்கியில்தான் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த 2 ஆண்டு காலகட்டத்தில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களால் மேற்படி நகைகளை 5ம் எதிர்மனுதாரரிடமிருந்து திரும்ப பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மனுதாரர் தரப்பில் எந்தவித சங்கதிகளும் தெரிவிக்கப்படவில்லை. அதுசம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை அசல் வழக்கானது வாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் ரூ.84,500/−ஐ வட்டியுடன் திரும்ப செலுத்தக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர, 5ம் எதிர்மனுதாரரை பொறுத்த எந்தவித பரிகாரங்களும் கோரப்படவில்லை. மேலும், 5ம் எதிர்மனுதாரர் வங்கியில் இருப்பதாக கூறப்படும் நகைகளை பொறுத்தும் எந்தவிதமான பரிகாரங்களும் கோரப்படவில்லை. இந்நிலையில், இம்மனு சங்கதிகளை தீர்மானிக்க 1 முதல் 4 பிரதிவாதிகள், வாதியிடமிருந்து ரூ.84,500/−ஐ நகைக்கடனுக்காக பெற்றுள்ளனரா, இல்லையா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். மேற்படி சங்கதியை இம்மனுவில் தீர்மானிக்க இயலாது, அதனை அசல் வழக்கின் முழு விசாரணைக்கு பின்னர்தான் தீர்மானிக்க இயலும். அசல் வழக்கானது 2023ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு தற்போது வரை சாட்சிய விசாரணை தொடங்கப்படாமலேயே உள்ளது. தற்போதைய சூழ்நிலையில், இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் அது அசல் வழக்கில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்தின் ஒரு பகுதியை வழக்கு விசாரணைக்கு முன்னதாகவே வழங்கியது போல் ஆகிவிடும். எனவே, தற்போதைய சூழ்நிலையில், மனுதாரர் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S

Uploaded on 22.09.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.09.22 17:32:02 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை

PON MELISA S

Uploaded on 22.09.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.09.22 17:32:08 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.3/2023 அதன்</u>**

**<u>அ.வ.எண்.284/2023</u>**

சீரான / வரைவு உத்தரவு
22.09.2025